# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

## வெற்றிடங்கள் - இரத்மலானை வளாகம்

### நிர்வாக உத்தியோகத்தர்கள் - ஒரு வருட ஒப்பந்த அடிப்படை

- **உதவிப் பொருளாளர் பதவி (ஒப்பந்த அடிப்படை)**

### உதவி கல்விசார் ஊழியர்கள் - நிரந்தர அடிப்படை

**தகவல் தொழில்நுட்பம் மற்றும் மேம்பாட்டு சேவைகளுக்கான மையம்**

- **பிணைய நிர்வாகி – தரம் II (Network Administrator)**

### எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் - நிரந்தர அடிப்படை

- **தொழில்நுட்ப அதிகாரி பதவி - தரம் II பகுதி "பீ"**

## தெற்கு பல்கலைக்கழகம் - சூரியவெவ

### கல்விசார் ஊழியர்கள் - நிரந்தர அடிப்படை

**தொழில்நுட்ப பீடம்**

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் திணைக்களம்**

**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு**

- **சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / தரம் II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத) / விரிவுரையாளர் (தகுதிகான்)**

**தகைமைகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை**

**கல்விசார் ஊழியர்கள் - நிரந்தர அடிப்படை**

**01. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I /II**

1. விண்ணப்பதாரிகள் விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவிக்கான (மருத்துவம்/ பல்வைத்தியம் - அல்லாத) பதவி இல: 02ல் உள்ளவாறு திருத்தப்பட்ட UGC சுற்றுநிரூப இல: 721 உள்ளவாறான கல்வித் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

அத்துடன்

2. (i) குறித்த துறையில் கலாநிதிப்பட்டத்தை கொண்டிருத்தல்.

அல்லது

(ii) குறித்த துறையில் ஆய்வுடன் கூடிய இருபத்து நான்கு மாத (24) முழுநேர ஒரு முதுமாணிப் பட்டத்தை கொண்டிருத்தல்.

அல்லது

(iii). ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தெரிவுக் குழுவின் பரிந்துரையின் பேரில் அல்லது முகாமைத்துவ சபையால் அனுமதிக்கக் கூடிய தொழில் தகைமைகளும் அனுபவமும்.

அத்துடன்

3. (a) **சிரேஸ்ட விரிவுரையாளர்- தரம் I-** ஆகக் குறைந்தது பன்னிரெண்டு (12) வருட அனுபவத்தை கொண்டிருத்தல் (அதில் ஆறு (06) வருட அனுபவத்தை மேலே 02 இல் குறிப்பிட்ட தகைமைகளுக்கு பின்னர் கொண்டிருத்தல்.)

(b) **சிரேஸ்ட விரிவுரையாளர்- தரம் II-** ஆகக் குறைந்தது ஆறு (06) வருட அனுபவம் மற்றும் பின்வருவனவவற்றில் ஒன்றில் அல்லது அதற்கு மேல் கொண்டிருத்தல்:

(i). பல்கலைக்கழக மட்டத்தில் கற்பித்தல்

(ii). தொழிற்றுறை அனுபவம்

(iii). அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆய்வு

(iv). பின்பட்ட படிப்பு

**02. விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத)**

1. விண்ணப்பதாரர்கள் UGC சுற்றறிக்கை 721 இன் பதவி எண்: 01 இன் வகை (1) அல்லது (2) இன் படி விரிவுரையாளர் (தகுதிகாண்) க்கு தேவையான கல்வித் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன்

2. (I) குறித்த துறையில் கலாநிதிப்பட்டத்தை கொண்டிருத்தல்.

அல்லது

(ii) குறித்த துறையில் ஆய்வுடன் கூடிய இருபத்து நான்கு மாத (24) முழுநேர ஒரு முதுமாணிப் பட்டம்.

அத்துடன்

(iii) இந்த ஆவணத்தின் எண். 01ல் கொடுக்கப்பட்டுள்ள சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் II ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 06 வருடங்களுக்கும் குறைவான அனுபவம்.

**03. விரிவுரையாளர் (தகுதிகாண்)**

(i) விண்ணப்பதாரி முதல் தர அல்லது இரண்டாம் தர (மேல் பிரிவு) சிறப்புடன் கூடிய நிபணத்துவம் கொண்ட பட்டத்தை கொண்டிருத்தல்.

அல்லது

(ii) விண்ணப்பதாரி இரண்டாம் தர (கீழ் பிரிவு) சிறப்புடன் கூடிய நிபணத்துவம் கொண்ட பட்டத்தை கொண்டிருத்தல்.

அல்லது

(iii) (a) சிறப்பு அல்லாத குறித்த பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற பட்டம் அல்லது குறைந்தபட்சம் இரண்டாம் தர சிறப்புடன் கூடிய வேறு எந்த பட்டமும்,

அத்துடன்

(b) முதுமாணி பட்டத்தில் ஆய்வறிக்கை/ஆய்வு மூலம் சம்பந்தப்பட்ட பாடத்தில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருட கல்வி ஆண்டை கொண்டிருத்தல்.

அல்லது

(iv) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தெரிவுக் குழுவின் பரிந்துரையின் பேரில் அல்லது முகாமைத்துவ சபையால் அனுமதிக்கக் கூடிய தொழில் தகைமைகளும் அனுபவமும்.

| |
|---|
| விஷேட குறிப்பு: விண்ணப்பதாரிகள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலில் BSc அல்லது BSc (சிறப்பு) பட்டம் (அல்லது இதே போன்ற பெயரிடப்பட்ட பட்டங்கள்) அல்லது கணினி அறிவியலில் BSc (சிறப்பு) பட்டம் (அல்லது இதே போன்ற பெயரிடப்பட்ட பட்டங்கள்) அல்லது கணினி பொறியியலில் BSc (சிறப்பு) பட்டம் அல்லது விண்ணப்பதாரிகள் தொடர்புடைய இளங்கலை பட்டம் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட பாடப் பகுதிகள் தொடர்பான முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |

## நிர்வாக உத்தியோகத்தர்கள் - ஒரு வருட ஒப்பந்த அடிப்படை

- **உதவிப் பொருளாளர் பதவி (ஒப்பந்த அடிப்படை)**

1. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இறுதியாண்டு II பரீட்சையில் சித்தி அல்லது அதற்கு சமமான ஏதேனும் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. (a) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றிலிருந்து கணக்கியலில் விசேட பட்டத்தைக் கொண்டிருத்தல்.

அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனமொன்றிலிருந்து பட்டத்தைக் கொண்டிருத்தலுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் அல்லது அதற்குச் சமனான நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

(iii) இலங்கை உயர் தொழிநுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) அல்லது அதனது முன்நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட கணக்கியலில் உயர் தேசிய டிப்புளோமாப் (HNDA) பட்டத்தைக் கொண்டிருத்தல்.

அத்துடன்

(b) அரசாங்க/ அரச திணைக்களம் அல்லது பிரபல்ய தனியார் துறை திணைக்களத்தில் கணக்கியல் / கணக்காய்வில் இரண்டு (02) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை** : இருபத்திரெண்டு (22) வயதிற்குக் குறையாததாகவும் முப்பது (30) வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

## உதவி கல்விசார் ஊழியர்கள் - நிரந்தர அடிப்படை

- **<u>பிணைய நிர்வாகி – தரம் II (Network Administrator)</u>**

**<u>தகைமைகள்</u>**

1. விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியலில் / கணினி பொறியியலில் முதல் தர அல்லது இரண்டாம் தர சிறப்புடன் கூடிய பட்டத்தை கொண்டிருத்தல்.

அல்லது

2. (a) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியலில் / கணினி பொறியியலில் சிறப்புடன் கூடிய பட்டத்தில் சித்தியை கொண்டிருத்தல்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து கணினி ஒரு பாடப்பொருளாக BSc பொதுப் பட்டப்படிப்பில் முதல் அல்லது இரண்டாம் தர பட்டத்தை கொண்டிருத்தல்.

அத்துடன்

(b) கணனி துறையில் ஒரு (01) வருட அனுபவம்.

அல்லது

3. (a) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து கணினிப் பாடத்தை ஒரு பாடமாகக் கொண்டு BSc பொதுப் பட்டப்படிப்பில் சித்தியை கொண்டிருத்தல்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து (கணினி ஒரு பாடப்பொருள் அல்லாத) BSc பொதுப் பட்டப்படிப்பில் முதல் அல்லது இரண்டாம் தர பட்டத்தை கொண்டிருத்தல்.

அத்துடன்

(b) கணனி துறையில் இரு (02) வருட அனுபவம்.

அல்லது

4. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து (கணினி ஒரு பாடப்பொருள் அல்லாத) BSc பொதுப் பட்டப்படிப்பில் சித்தியை கொண்டிருத்தல்.

அத்துடன்

கணனி துறையில் மூன்று (03) வருட அனுபவம்.

அல்லது

5. வேறு எந்த பட்டத்தை கொண்டிருத்தல்.

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் / கணினி தொழில்நுட்பத்தில் முதுகலை டிப்ளமோவை கொண்டிருத்தல்.

அத்துடன்

கணனி துறையில் ஒரு (01) வருட அனுபவம்.

விஷேட குறிப்பு: விண்ணப்பதாரிகள் BSc ல் Network Engineering / System Engineering பிரிவில் மற்றும் அந்தந்த துறையில் அனுபவம் மற்றும் அறிவு பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலைபின்னலில் (Networking) (Eg: CCNA, RHCSA, MCSA, etc…) அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறைகளில் தொழில்முறை படிப்புகள் /சான்றிதழை முடித்த விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணலில் முன்னுரிமை வழங்கப்படும்.

## எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் - நிரந்தர அடிப்படை

- **<u>தொழில்நுட்ப அதிகாரி பதவி - தரம் II</u> பகுதி “பீ”**

**<u>குறைந்தபட்ச தகைமைகள்</u>**

(i) பௌதீக விஞ்ஞான பிரிவில் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தி.

அத்துடன்

(ii) குறைந்தபட்சம் ஒரு வருடம் (முழு நேரம்) கால அல்லது அதற்கு சமமான பதவிக்கு தொடர்புடைய திறன் சார்ந்த முறையான பயிற்சித் திட்டத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**வயதெல்லை** : முப்பத்தைந்து (35) வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்**

01. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I

: - U-AC 3 (I) Rs. 91,310 - 7x2,170 – 106,500 p.m. + (151% கல்விசார் கொடுப்பனவு + அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

02. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II

: - U-AC 3 (II) Rs. 79,360 - 11x1,630 – 97,290 p.m. + (151% கல்விசார் கொடுப்பனவு + அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

03. விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத)

: - U-AC 3 (III) Rs. 69,580 - 5x1,630 – 77,730 p.m. + (131% கல்விசார் கொடுப்பனவு + அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

04. விரிவுரையாளர் (தகுதிகாண்)

: - U-AC 3 (IV) Rs. 54,600 - 10x1,335 – 67,950 p.m. + (115% கல்விசார் கொடுப்பனவு + அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

05. உதவிப் பொருளாளர் பதவி (ஒப்பந்த அடிப்படை)

:- ரூ.50,625 p.m. + (ரூ. 7,800 வாழ்க்கைச் செலவு + ரூ.5,000 மாதாந்த கொடுப்பனவு)

06. பிணைய நிர்வாகி – தரம் II

:- U-AS 2 (II) ரூ.50,625 – 3 x 1,335 – 54,630 (EB) 55,965 - 14x1,335 - 74,655 p.m + (ரூ. 7,800 வாழ்க்கைச் செலவு + ரூ.5,000 மாதாந்த கொடுப்பனவு + 45% MCA + 20% மேலதிக கொடுப்பனவுகள்)

07. தொழில்நுட்ப அதிகாரி பதவி - தரம் II பகுதி "பீ"

**:-** U-MT I (III A) ரூ. 31,625 – 07 x 300; 10 x 355 – 37,275 p.m. + (ரூ. 7,800 வாழ்க்கைச் செலவு + ரூ.5,000 மாதாந்த கொடுப்பனவு + 45% MCA + 20% மேலதிக கொடுப்பனவுகள்)

**நியமன முறை**

பதவிக்கு பொருந்தக்கூடிய பொது உளச்சார்பு பரீட்சை அல்லது விளக்கக்காட்சி (Presenation) மதிப்பீட்டின் முடிவுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் (Interview) மூலம் தெரிவுகள் இடம்பெறும்.

**ஏனைய நன்மைகள்**

**நிரந்தர அடிப்படை:-**

தகுதியான பதவிகளுக்கான ஓய்வுக்கால விடுமுறை, கல்விக் கொடுப்பனவுகள் மற்றும் ஆராய்ச்சி கொடுப்பனவுகள், EPF, ETF, பணிக்கொடை தொகை, இலவச சுகாதாரக் காப்புறுதி, வருடாந்த ஊக்குவிப்பு தொகை, ஊழியர்களது குழந்தைகளுக்கான புலமைப்பரில்கள், பல்கலைக்கழக வைத்தியசாலையில் சிகிச்சையில் முன்னுரிமை, நலன்புரி போக்குவரத்து மற்றும் ஏனைய சலுகைகள்.

**ஒப்பந்த அடிப்படை:-**

EPF, ETF கொடுப்பனவுகள், வருடாந்த ஊக்குவிப்பு தொகை, பல்கலைக்கழக வைத்தியசாலையில் சிகிச்சையில் முன்னுரிமை மற்றும் நலன்புரி போக்குவரத்து.

**பொது நிபந்தனைகள் - அனைத்து ஊழியர்கள்**

01. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

02. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ ஆணைக்குழுவினால் ஒவ்வொரு பதவி / தரத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட காலியிடங்களுக்குள் மட்டுமே விண்ணப்பதாரிகளை தெரிவு செய்தல் தேர்வுகள் இடம்பெறும்.

03. விண்ணப்பதாரிகளால் இணையத்தளத்தில் (www.kdu.ac.lk) இருந்து தரவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டு தொடர்புடைய சான்றிதழ்களின் நகல் பிரதியுடன் 2023.05.30ம் திகதிக்கு முன்னர் பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது நேரடியாக கையளித்தல் வேண்டும்.

04. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வெற்றிடத்தை குறிப்பிட வேண்டும்.

05. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

06. அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / கட்டுப்பாட்டு வாரியங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் பிரதானி மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

07. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொண்ட விண்ணப்பப்படிவத்தின் மூலமாக மாத்திரம் குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. பிந்திக்கிடைக்கும், பூரணப்படுத்தப்படாத அல்லது மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனை இல 06 இற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

08. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.

09. தேவையான தகுதிகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முக / செயன்முறை பரீட்சை மற்றும் தகுதித் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

10. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஒவ்வொரு பதவிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளின்படி மற்றும் செயன்முறை பரீட்சை / தகுதித் தேர்வு மற்றும் நேர்முக பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தேர்வுகள் நடைபெறும்.

11. தகுதித் தேர்வு / கட்டமைப்பு பரீட்சை / மற்றும் அல்லது நேர்முக பரீட்சைக்கு மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும் உரிமையை பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

12. நிரந்தர ஊழியர் வெற்றிடங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சமீபத்திய சம்பளச் சுற்றறிக்கையின் படி சம்பளம் வழங்கப்படுவதுடன் சம்பளத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

13. ஓப்பந்த அடிப்படை ஊழியர் வெற்றிடங்களுக்கு குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய அடிப்படை சம்பளத்துடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் (Department of Management Services) அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

14. திருப்திகரமான சேவையை முடித்தபின் துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ ஆணைக்குழுவினால் ஆண்டுதோறும் ஒப்பந்த காலம் நீடிக்கப்படலாம்.

15. விண்ணப்பதாரர்கள் UGC சுற்றறிக்கைகளை தகுதிகள் தொடர்பான சிறப்பு குறிப்புகளுக்கு பொருத்தமான திருத்தங்களுக்கும் மற்றும் பொருத்தமான தகுதிகளுக்கு KDU இணையதளத்தைப் பார்க்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சிரே. விரிவுரையாளர் தரம் I / II, விரிவுரையாளர் (தகுதிகாண்) – 721, 935, 08/2016, 08/2016(ii), 08/2016 (iii)

விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதது) - 07/2018

உதவி பொருளாளர் பதவி (ஒப்பந்த அடிப்படை) - 15/2017

தொழில்நுட்ப அதிகாரி பதவி - தரம் II பகுதி "பீ" - 763

**<u>பொது நிபந்தனைகள் - கல்விசார் ஊழியர்கள்</u>**

01. நிர்வாக உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கான விண்ணப்பதாரர்கள் தங்கள் கற்பித்தல் திறனை நிரூபிக்க தேர்வுக் குழுவின் முன் விளக்கக்காட்சியை (Presentation) (ஆங்கிலத்தில்) செய்ய வேண்டும்.

**<u>பொது நிபந்தனைகள் - நிர்வாக உத்தியோகத்தர்கள்</u>**

01. உதவிப் பொருளாளர் பதவி (ஒப்பந்த அடிப்படை) - தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் பொது உளச்சார்பு பரீட்சைக்கு வரவழைக்கப்படுவார்கள்.

**<u>பொது நிபந்தனைகள் - உதவி கல்விசார் ஊழியர்கள்</u>**

01. பிணைய நிர்வாகி – தரம் II - தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் பொது உளச்சார்பு பரீட்சையுடன் கட்டமைப்பு பரீட்சைக்கும் வரவழைக்கப்படுவார்கள்.

**<u>பொது நிபந்தனைகள் - எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள்</u>**

01. தொழில்நுட்ப அதிகாரி பதவி - தரம் II பகுதி "பீ" - தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் பொது உளச்சார்பு பரீட்சையடன் கட்டமைப்பு பரீட்சைக்கும் வரவழைக்கப்படுவார்கள்.


**மேலதிக விபரங்களுக்கு:**
செல்வி. கஸ்மி சந்தநாயக
சிரேஸ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள் கிளை)
தொலைபேசி : +94 (0) 11 263 2028 (Ext: 377) | 0710219289